# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0694/ஊராட்சி/2018

ஆணை எண்: 136/2018

நாள்: 8/06/2018

P. ராஜசேகர்,
வரகுணராமபுரம்,
ஜமீன் நத்தம்பட்டி பஞ்சாயத்து, – **மனுதாரர்**
கோபாலபுரம் (போஸ்ட்),
கீழராசகுலராமன் (வழி) 626 136.

வட்டார வளர்ச்சி அலுவலர்,
இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், – **எதிர் மனுதாரர்**
இராஜபாளையம்.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், ஜமீன் நத்தம்பட்டி பஞ்சாயத்தில் வரகுணராமபுரத்தில் வசிக்கும் திரு. P. ராஜசேகர் தனது 2.6.18 நாளிட்ட கடிதத்துடன் விருதுநகர் மாவட்டம் ஆட்சித்தலைவர் அவர்களுக்கு முகவரிட்ட கடிதத்தை இணைத்து அனுப்பியுள்ளார். அதில் அவருடைய நிலத்தில் கட்டப்பட்டு முடிந்த வீட்டிற்கு தீர்வை ரசீது வேண்டி ஊராட்சி மன்றத்தை அணுகியதில், அவருடைய பக்கத்து இடத்து சொந்தகாரர் திருமதி. கீதா அவர்களால் மதுரை உயர்நீதி மன்றத்தில் அவர்கள் டயர் கம்பெனி வைத்திருப்பதாக பொய்யான கேஸ் கொடுத்துள்ளபடியால் அதை விசாரித்த உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் நேரில் வந்து ஆய்வு செய்ததில் எந்த ஒரு டயர் கம்பெனி இல்லை என்றும், வீட்டு தீர்வை அளிப்பதற்கு தடை இல்லை என்று கூறி சென்றுவிட்டார்கள் என்றும், ஆனால் இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் வீட்டிற்கு தீர்வை ரசீது வழங்க காலதாமதம் செய்கிறார் எனத்தெரிவித்து, விரைவில் வழங்க கோரியுள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7–ன் படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:
திரு. P. ராஜசேகர்,
வரகுணராமபுரம்,
ஜமீன் நத்தம்பட்டி பஞ்சாயத்து,
கோபாலபுரம் (போஸ்ட்),
கீழராசகுலராமன் (வழி) 626 136.

நகல்:
1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விருதுநகர் மாவட்டம்,
   விருதுநகர் – (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)